Sahitya Akademi Award-2024, Dinakaran Dt.19.12.2024

## திருநெல்வேலி எழுச்சியும், வஉசியும் 1908 ஆய்வு நூல் தேர்வு

# சென்னை பேராசிரியருக்கு சாகித்ய அகாடமி விருது

### 30 ஆண்டு ஆராய்ச்சிக்கு கிடைத்த பரிசு என பெருமிதம்

நெல்லை, டிச. 19: ஒன்றிய அரசின் சார்பில் இந்தியாவின் 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் சாகித்ய அகாடமி விருது வழங்கப்படுகிறது. அதன்படி 2024ம் ஆண்டுக்கு விருது பெறுவோரின் பட்டியல் நேற்று வெளியானது.

இதில் தமிழில் 'திருநெல்வேலி எழுச்சியும், வஉசியும் -1908' என்ற ஆய்வு நூலை எழுதிய பேராசிரியர் ஏ.ஆர். வெங்கடாசலபதிக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வரலாற்று எழுத்தாளர் மற்றும் மொழி பெயர்ப்பாளரான ஏ.ஆர்.வெங்கடாசலபதியின் சொந்த ஊர் சென்னை.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் கடந்த 1995 முதல் 2000 வரை வரலாற்றுத் துறை விரிவுரையாளராக பணியாற்றினார். தொடர்ந்து 2001 ஜூன் முதல் சென்னையில் உள்ள எம்ஐடிஎஸ்சில் ஆசிரியர் உறுப்பினராக பணியாற்றினார்.

2007ல் சமூக அறிவியல் ஆராய்ச்சிக்கான விகே ஆர்வி ராவ் பரிசு வழங்கப்பட்டது.

தனது 'திருநெல்வேலி எழுச்சியும், வஉசியும் -1908' என்ற ஆய்வு நூலுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து பேராசிரியர் ஏ.ஆர் வெங்கடாசலபதி கூறுகையில், 'எதிர்பார்க்காத போது இந்த விருது கிடைத்துள்ளது. 30 வருட ஆராய்ச்சிக்கு கிடைத்த பரிசாக இதை கருதுகிறேன். வஉசியின் தன்னலமற்ற தியாகம் விடுதலைக்கான அவரது உழைப்புக்கு கிடைத்த அங்கீகாரமாக இதை கருதுகிறேன். மேலும் பெரியார் வாழ்க்கை வரலாற்றை ஆங்கில நூலாக எழுதி வருகிறேன்' என்றார்.

விருது பெற்ற வெங்கடாசலபதிக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

### முதல்வர் வாழ்த்து



சாகித்ய அகாடமி விருது பெற்ற பேராசிரியர் ஆ.இரா.வெங்கடாசலபதிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து சமூக வலைதளத்தில் நேற்று அவர் வெளியிட்டுள்ள பதிவில், '40 ஆண்டுகளாக கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரை பற்றிய ஆய்வில் மூழ்கி, அதன் விளைச்சலாக 'Swadeshi Steam' நூலை ஆ.இரா.வெங்கடாசலபதி கொண்டு வந்துள்ள வேளையில், அவரது 'திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908' நூல் சாகித்ய அகாடெமி விருது பெறுவது இரட்டிப்பு மகிழ்ச்சியை தருகிறது. கலகம் என்று அன்றைய ஆங்கிலேய ஆட்சியாளர்கள் குறிப்பிட்டதை திருத்தி, நம் 'எழுச்சி' என பதிவு செய்த வரலாற்று ஆய்வாளர் ஆ.இரா.வெங்கடாசலபதிக்கு என் வாழ்த்துகள்! பாராட்டுகள்' என கூறியுள்ளார்.